உ

SHIYALI.

திருச்சிற்றம்பலம்.

மாயூரம் வித்வான்,

கிருஷ்ணய்யரவர்கள்

இயற்றிய

தில்லை,

ஸ்ரீ-நடராஜர் திருப்புகழ்ச் சந்தவிருத்தம்.

இஃது

தஞ்சாவூர், சதாவ்தானம்,

சுப்பிரமணிய ஐயரவர்கள்

விருப்பின்படி

சென்னை:

ஸ்ரீமட்டுவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

இதன்விலை அணா - 4

Copy Right.

1898.

ஸ்ரீ நடராஜப்பெருமான்.

சிறப்புக்கவிகள்.

தஞ்சாவூர், சதாவதானம்,
சுப்பிரமணிய ஐயரவர்கள்
இயற்றியது.

அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

பூமேவு பொதுத்தில்லை நடராசன் கூத்திறைக்குப் பொருந்தத் தோண்மேற், றாமேவு இருட்டிணநா வலன்சாத்தப் பாமாலை சூட்டினனத்,தேமேவு பணிச்சேடன் சிரோன்மணியின் மேன்மணியாய்த் திகழ்ந்ததென்னின், மாமேவு மதன்பெருமை வையகத்தி லெடுத் துரைக்க வல்லார்யாரே.

முருகதாசசுவாமிகளென்றும்
திருப்புகழ்ச்சுவாமிகளென்றும் வழங்குகின்ற
தண்டபாணிசுவாமிகள்
இயற்றியது.

கலித்துறை வண்ணத்துறை

ஆயூகத்தன் பர்க்கவமான மடுக்காதே
தீயூழ்தட்டுஞ் சிற்சபைநாதர் திருத்தாண்மேல்
வாயூறச்சந் தக்கவி நூறு மலர்த்தார்போல்
மாயூரத்தன் கிர்ட்டிணசாமி வகுத்தானே

திருமயிலை-சண்முகம்பிள்ளையவர்கள் பாடிய
அறுசீர்க்கழிநெடில் விருத்தம்.

இந்தப்பார் மிசைக்கொடிய வினைப்பிறவி யெடுத்துழல்வோர்க் ...யந்தஞ், சிந்தப்பாதந் தூக்கி யாடியதில்லைச்சிற்ச பேசன்சீர் ...வலருமிதம்பூதெ... விஞ்ஞான்றின் இசைத்திட்டானு ...யென மயூரநகர்க்கிருட்டிணப்பேர்த் தமிழரேறே.

அஷ்டாவதானம்

பூவை-கலியாணசுந்தரமுதலியாரவர்கள்

இயற்றிய வண்ணவிருத்தம்.

சயிலமக டனக்குநயப் புறுவிழிகள்-களிகூரவே
    தருவன்முது கினிற்பதியத் திருவடிக-ணிதாவியே
கயிலைமலை நிறத்தொளிர்தத் துவவெழிலின்-வடிவாடவே
    கனகசபை யகத்துநிருத் தமதருளு-மரன்மீதிலே
பயிலுமுது மறைக்கிசையப் பனுவலள-விலநாடியே
    பகர்தமிழ தனுக்குரிமைப் புலவனென-வுலகோதவே
யுயர்வுறுபல் குழிப்படர்நற் கவிகள்சத-வகைபாடினன்
    னுறுதிபெறு கிருட்டினவிப் பிரனெனுமொர்-சதுராளனே.

◇•◇-◇•◇

பரிசோதனம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
ரு	கஎ	யைககழை	யைக்கழை
,,	உசு	லூராவகை	லுருவகை
சு	ரு	கமிழ்	கமழ்
கக	ரு	புடன்	யுடன்
,,	ரு	மாதிலின்	ம்ாதலின்
,,	உஎ	மாசிய	மாகிய
கஉ	கஎ	முன்தரு	முனதரு
,,	உரு	மீதுவதை்	மீதுவைத்
கச	உசு	கவர்தன்று	கவர்ந்தன்று
கரு	உஉ	கினசயும்	கிசையும்
சஎ	க0	லமைதலை	லமைத்தலை
சுஉ	உரு	நினகாத	நின்காத
எசு	உச	தொட்ரா	தொடரா

உ

திருச்சிற்றம்பலம்

திருமதி (1982)

ஸ்ரீ நடராஜர் திருப்புகழ்ச் சந்தவிருத்தம்

கற்பக விநாயகர்
வணக்கம்.

குழிப்பு.

தத்த தத்ததன தானன தனதன
தத்த தத்ததன தானன தனதன
தத்த தத்ததன தானன தனதன—தனதான.

சொற்பொ ருட்பிரம மாகிய கனகச
பைக்கு ணிர்த்தமிடு சோதியு மதிபரி
சுத்த சத்திசிவ காமியு முதவிய—சுதனானேன்

சுற்ற முற்றதிறல் வேடுவர் தம்தும்
கட்கு மெத்தவுற வானவ னிறைபுகழ்
துற்ற வெற்றிவடி வேலவ னுறுதுணை—யெனவாழ்வோன

பொற்ப தத்திலமர் வானவர் முதலொரு
முத்தொ ழிற்குரிய தானவ ரவரவர்
புத்தி வைத்தரிய பூசனை செயவருண்—முதலானேன்

பொற்பு டைத்தமிழ் விவேகம திலரும
னத்து றக்கருது வாரெணி லனவரத
புட்க ளக்கவிதை மரரிபொ ழியவுணர்—வருண்மேலோர

அற்பி னிற்கதலி மாயல விளவுடன்
முப்பு டைக்கனிக ளுவலி னியகழை
அப்ப மிட்டலிகண் மோதக மிவைபல—வகையோடே

அற்பு தத்ததினை மாவள வியமது
நெற்பொ ரித்திரள்வி ராவுக டலையவ
லத்தி ரிக்குநிக ராகவு தவமகிழ்—தருசீரோன்

கற்ப தித்தமின லாமென விடுபலி
ரத்தி னத்தசரு வாபர ணதரண
கத்த னத்தனெம தாவல றவருளு—மிறையானோன்

கற்பு மிக்கமறை யோடைய ணியுமெதிர்
கொட்டு புத்தமுத ஞானம தமுமொளிர்
கற்ப கப்பெயர்வி நாயக னடியிணை—தொழுவாமே

குழிப்பு.

தந்ததன தானதந்த
தந்ததன தானதந்த
தந்ததன தானதந்த—தனதானு.

தங்கமலை போனிமிர்ந்த-கொங்கையென வேசுழன்று
சங்கமட வார்முனின்று—தளராதே

சஞ்சலமெ லாமொழிந்து-னன்பர்பிற கேதிரிந்து
தஞ்சமெனை யாள்கசம்பு—மகதேவா

கொங்கவிழ்சி லோதிகுன்றின்-மங்கைசிவ காமியன்பு
கொண்டெதிரி ருடநின்ற—குருநாதா

குஞ்சிதப தாரவிந்த-ரஞ்சிதவி லாசவென்று
கொஞ்சுதமிழ் பாடமுந்தி—யருளாயே

திங்களணி மாலையொன்று-கொன்றைவள மேவுகங்கை
சிந்துநற வூறுதும்பை—முடியோனே

செங்கணெடு மாலயன்பெ-ரும்புலிவி யாளமும்பர்
தெண்டனிட வாகமம்பன்—மறைபேயாடே

பொங்குபல கோடியண்ட-மைந்துதொழி லாரவைந்து
புங்கவரு மேபுரிந்து—புகழ்சீரார்
புண்டரிக மாதலங்கொண்-மன்றுணட ராஜனெங்கள்
புந்தியக லாதுறைந்த—பெருமானே. (க)

குழிப்பு.

தையத்தனதன தானதனுதன
தையத்தனதன தானதனுதன
தையத்தனதன தானதனுதன—தனதானு.

வையத்திடைநல மீதுபொலாதென
மெய்யைத்தெரிகர ஞதிகணீதர
மல்குற்றனவவை யேகொடுநானினை—மதியாதே
வள்ளற்கொடைவல வாதனதாவென
வெள்ளத்தனையுமு தாரமிலாரிடை
மல்லற்கவிசொலி மாநிதிதேடியு—மயலாலே
கையத்தனைவிழி யாளிடையேயிலை
மெய்யைகககைழயென லாமுலையோவளர்
கல்லைப்பொடிசெய்க டாசலமாமென—மடமானர்
கள்ளக்கலவியி லேவசஃமாயுடல்
தள்ளத்தளர்வுறு வேனமனுல்வரு
கவ்வைக்கெனமொழி வேனருளாலினி—யெனையாளாய்
வையைக்கிறைவன்மு னேபரிமேல்கொடு
செல்லத்திருவுள மேவுதயாபர
மைம்பற்பொருதிரை வாரிதிமூழ்கிய—மறையோனுல்
வள்ளைச்செவிமுகிழ் வாண்முலைமீறிய
தையற்பரவையு ளூடலுராவகை
வல்லைப்பரிவொடு தூதுவனுகிய—மறையோனே

தெய்வப்பழமறை மாலயனுதிய
ருய்வைத்தருகவ நாதிபுராதன
செல்வக்கொடிசிவ காமிமனோரத—வெனுநாதா

செய்யிற்கமலமு லாவியவாளைகள்
பையப்பொழிலிடை வாவுறுசீர்பெறு
தில்லைக்கனகச பாபதியாகிய—பெருமானே. (உ)

குழிப்பு.

தனதனதத்தன தத்தனதந்தன
தனதனதத்தன தத்தனதந்தன
தனதனதத்தன தத்தனதந்தன—தனதானு.

அலைகடல்வட்டமு டுத்தபெரும்வுவி
யதனிலநித்திய நித்தியமென்பதை
யறிகருவித்திரள் பெற்றுமுயன்றுணே—யறியாமே

அவனெனைமெத்தவ டுத்தவனென்பது
மிவனொருநித்திய சத்துருவென்பது
மவரயலுற்றவர் மற்றவரென்பது—மொழியாமே

கலையுணர்மெய்த்தவ ருற்றிடினும்பழி
சொலவலயுத்திப டித்தெழின்மங்கையர்
கலவிநயத்தையு ரைத்தவர்பின்றொடர்—வெறிநாயேன்

கருதியவெத்திற வித்தையினுஞ்சிறி
தெனைநிகருற்றவர் மற்றிலையென்றுறு
கதியையொழித்துமு ளைக்குமகந்தையி—லழிவேனோ

பலமுறைமுத்தமிழ் வித்தகரும்புகழ்
பெறவருசித்தக ணத்தவரும்பர
பதமுறநத்திய பத்தருமும்பரு—மகலாதே

பரிவொடுபத்திவ லேக்குணிதம்படு
கருணையுமுத்திகொ டுத்தருளும்பிர
பலமுமித்துவ மூத்தவிழைந்தருள்—பெருவாழ்வோய்
கலகமிடத்தகு துட்டநமன்றனை
வெருவமடக்கிய டக்குதுமென்றருள்
கருதுபுதெற்குமு கத்தொடுநின்றுபு—னகையோடே
கலகலெனத்தொனி யுற்றசதங்கையு
தளபதுமப்பதம் வைத்துமகிழ்ந்தொரு
கனகசபைக்குண டித்தருளுஞ்சிவ—பெருமானே. (ு)

குழிப்பு.

தனனத் தந்தத்
தனனத் தந்தத்
தனனத் தந்தத்—தனத்த தனதன.

உருவிற் பைம்பொற் கமலேக்கும்பொற்
புறுமித் தங்கக்—கொடிச்சி யெனவரு
முவகைக் கும்பொய்ப் பொருளுக் குஞ்சுற்
றுவரிக் குண்டப்—புவிக்கு மனமிக
வுழலக் கண்டற் பர்களேச் சந்தித்
துலவிப் புண்பட்—டலுத்து முலகினி
லொருசற் றுஞ்சற் குணமற் றும்பித்
துடையற் கும்பிற்—படத்தி ரியுமெனே
அருகுற் றென்றுக்கமொழித் தஞ்சற்
கவெனப் பண்பிற்—கரைத்து நெறிபட
வடைவிற் கும்பிட் டுனேநித் தஞ்சித்
தமதிற் சிந்தித்—திருக்க வுமினிப

வருளிற் கண்டற் புதநிற் றெண்டர்க்
கருமைத் தொண்டைச்—செயற்கு முன்துபொ

ணடியிற் சந்தக் கவிதொட் டின்புற்
றணிதற்கும்பட்—சம்வைத்து தவியருள்

செருவிற் றண்டத் தடிபட் டுங்கைத்
திறலைக் கண்டற்—சுனற்கு முதவினை

செறிகற் கொண்டுட் பரிவுற் றுந்தச்
செயலைச் சிந்தித்—தவற்கு மகிழ்வினை

தெருவிற் கந்தைத் துணியிற் சிந்தச்
சிறுபிட் டன்றிட்—டவட்கு முறவினை

சினவிச் செங்கட் சமனைக் கொன்றச்
சிறுவற் கும்பொற்—பதத்தை யருளினை

தருணக் கஞ்சத் தவனத் தன்பொற்
றளகத் தன்கைப்—பதத்தில் விழியுற

தவளத் துங்கச் செவிமுற் றன்பிற்
றழுவிக் கொஞ்சித்—துதிக்கு மரவொலி

தலமெட் டுந்தப் பதுமத் தண்டைச்
சரண்வைத் துந்திக்—குதித்து லவுபர

தவிதப் பண்பைக் குளிரக் கண்டுத்
தமிமெச் சுஞ்சிற்—சபைக்கு ளொருவனே. .(ஙூ)

குறிப்பு.

தனதனந்தன தனதனந்தன
தனதனந்தன தனதனந்தன
தனதனந்தன தனதனந்தன—தனதான.

அமைவ ரும்பொரு ணசைமி குந்துறு
பொழுத வம்படு தொழில் புரிந்தன
னணைவ ரும்பழி மொழியு மங்கைய—ரதிமோகன்

அனுதி னங்கொலை களவு வஞ்சக
மதும் றந்தில னகமொ ழிந்தில
னவனி யின்கணொ ரறமு யன்றில—னொருபோதும்

நமது குஞ்சித பதநி னைந்தொரு
மலர ணிந்தில னடியர் தங்களை
நகுவ தன்றியொர் பணிபு ரிந்தில—னிவனூர்நம்

நடன மன்றுற வெனமு னிந்திடல்
தரும மன்றொரு கதியி லன்றரு
ணமிது வந்தருள் புரித லுன்கடன்—விடின்மோசம்

உமையு நந்தியு மிருபு றங்கொள
வரிய யன்கட வுளர்பு ரந்தர
னுரிய வன்பர்கள் புலிப தஞ்சலி—களிகூர

ஒருப தங்கரு முயல கன்புற
மொருப தந்தனி யுயர்வி சும்பிடை
யுலவ நின்றப ய்வர தங்கையொ—ளிரமேவு

தமருகங்குமு றவுநி மிர்ந்தெழு
தழன்மு ழங்கவு முதிரு மெண்டிசை
தவழ்நெ டுஞ்சடை நிலவு கங்கையு—மிசைதாவத்

தகஜ ணுந்தக தகஜ ணுந்தக
தகவெ னும்பர தவித முந்துறு
தமனி யந்திகழ் பொது நடம்புரி—பெருமானே. (ரு)

குழிப்பு.

வண்ணச்சந்தம்.

தந்தத்தா தானதந்தன தானதனந்தன தானதனந்தன
தந்தத்தா தானதந்தன தானதனந்தன தானதனந்தன
தந்தத்தா தானதந்தன தானதனந்தன தானதனந்தன—
தனதான.

கந்தத்தே னூறுபங்கய மேலுறையந்தண னூர்தருபெ ண்களி-லிந்தக்கோ மாதுசுந்தர மேனகையுஞ்சொலொ ணுது மணங்கமழ்-கஞ்சப்பூ வார்தருந்திரு மாமகளும்புகழ் மேனி ளம்பிடி—நடையாலே

கண்சற்றே மூடிநின்றுசெய் மாதவருந்தவ வேடமொ ழிந்தெதிர்-கெஞ்சிக்கூ சாதுபின்றொடர் வாரமுதந்தரு வா ய்மொழியென்றுப-கர்ந்திட்டா ளாயினும்பர்த மூணில்விரு ம்புவ தேதெனமங்கையர்—மயலாலே

எந்தப்பா டாயினும்படு மாறுதுணிந்துறு மானமிழந் துப-ணந்தப்பா தேபகிர்ந்தவ ரோடுமெகிழ்ந்தொரு லீலைவிரு ம்புவ-னிந்தக்கா மாதுரன்றனை நீயும்விரும்பிலை யேலினிவந் தருள்—பவர்யாரோ

என்கட்பா ராதரும்பிழை தாயினுவந்தொரு மாதவன ன்றுசெய்-வென்றிப்பூ சாபலன்கொடு நீகதியென்றுற வாவி னியஞ்சலை-யென்றப்போ தேநமன்பட வீசியகுஞ்சித பாதமு வந்தருள்—புரிவாயே

சந்தப்பா மாலைகொண்டொரு தோழனெனும்பரி வா ல்வருசுந்தரர்-சொந்தக்கா ரார்கருங்குழல் பூசுசுகந்தக லா டைமிகும்பணி-தந்தப்பால் போலுமின்சொலு ளூடலுறுத வளோடு சுகம்பெற—வருதோ

தன்பெற்ரோர் காணவன்ருெரு பாலகனின்சிவ காமிம
ணங்கமிழ்-கொங்கைப்பா லாரவும்பொழி தேன்மழையென்
றுசொன் மேன்மைபொருந்திய-தங்கத்தோ டார்தருஞ்செவி
பாடன்மகிழ்ந்தரு ளாடல்புரிந்திடு—மிறையோனே

அந்தத்தி யோரிடுந்தழல்பூவலருந்தட மாகவிருங்கடல்-
வன்கற்றூ ணேமிதந்திட மேலுரகங்கடி வாயமுதந்தர-வங்
ங்குற்றே பேர்பெறும்படி நீயருளும்புகழ் நாவரசன்சொ
ல—மகிழ்மேலோய்

அன்பிற்போ யோர்பெருந்துறை மேவுகுருந்தக னீழல
மர்ந்தடி-வந்தித்தே வாசகஞ்சொலு வாரைமகிழ்ந்துப தேச
மொழிந்தது-மன்றிப்பாய் மாவெழுந்தருள் சேவகனம்புலி
யூரனெனுஞ்சிவ—பெருமானே. (கூ)

குழிப்பு.

தனனதானதன தனத்தனுதன
தனனதானதன தனத்தனுதன
தனனதானதன தனத்தனுதன—தனதானு.

உனதுபாததரி சனத்திலெம்ன
துருகவேயிலெய தெனக்கெனேரமு
மொருவிசாரமுள தடுத்தபோழ்தனன்—மெழுகேயாய்

உருகுநேயவடி யவர்க்குளேசொலு
மறிவுநூல்கள்பல படித்திலாமையு
மொருவிசாரம்வெறி பிடித்தபேயென—மயலாலே

இனமதாகமுலை கனத்ததேயிடை
சிறியதேயதனை யொடித்திடாமலெ
னிருகையாலுமுற வணைக்கவோவென—மடவார்பால்

இனியதாயசுக விருப்பிலேவரு
பலவிசாரமவை சொலப்படாதினி
யிவையெலாமொழிய நொடிக்குளேயுன—தருடாராய்

சனகராதிமுனி வருக்குமோர்விதி
தழுவுசேடசய னருக்கும்வேறுள
தவமகாவிருடி களுக்குமேனகை—முதலானோர்

சதிருலாவுதரு நிழற்கண்வாழ்தரு
சசிமணாளரவர் தமக்குமேழ்திசை
தமையளாவுபுர வலர்க்குமேயவ—ரவர்வாழ்வோ

நினையுபாறுமரு ளருட்ப்ரபாகர
நிமிர்சராசரச டமுற்றுமேய்வற
நிறைபராபரக யிலேக்கணூர்தரு—குருநாதா

நிமலமேவுசக ளநிஷ்க்களாபல
மறைகளார்முடியி னடிக்குமாரரு
ணிலயமேகனக சபைக்குள்வாழ்சிவ—பெருமானே. (எ)

குழிப்பு.

தானதந்தன தானதந்தன தனனதனதன தனதனதன
தானதந்தன தானதந்தன தனனதனதன தனதனதன
தானதந்தன தானதந்தன தனனதனதன தனதனதன
—தனதான.

கானகந்தனி லேவளர்ந்திடு மாமுமொருபய னுளதுநா
யுமொர்-நூலுணர்ந்தவ ராலுகண்பிடை யுவமைமொழிதர வு
தவும்யாதுமில்-காமிவந்தவ மேபிறந்திவ ணொழிவதுவுமுன
தருள்கொலோதலே—விதியேயோ

காயமும்பெரு வாழ்வுமங்கையர் கலவியிடைவரு சுகமு
மோர்பொரு-ளாவதும்புயன் மீதெழுந்திடு மினலினழிவன நி

லையுருவெனல்-காணவுஞ்சிறி தாயினுங்கரு துகிலன்வெயிலி டு புழுவதாபுடன்—மெலிவேனோ

போனதிங்கிவை போகவென்பல புகல்வதுனதுள மறியு மாதிலி-னாள்கழிந்தன வீணிலென்றினி யுனதுதிருவருள் பெறுவதோவிருள்-போலுமந்தகர் பேர்நினைந்திட லுடலுமுயிரொடு பதறும்மாசொல—முடியாதே

பூதிகண்டிகை மாலைகொண்டவர் புளகமுறவரு ளமுதமூறுமு-னாதுகுஞ்சித பாதபங்கய மெனதுளமிசையு நடனமாரனு-பூதியுந்தமிழ் பாடலுந்தர விதுசமயமினும் வறிதிராமலு—னருடாராய்

மீனவன்சுர மானதந்தணர் தனையரளியிடு யுனிதநீறொடு-தீரவுஞ்சமண்மாயவுந்தக மொழியுநவரச மதுரமார்தமிழ்-வேதமென்றசொன் மாலையும்பனி யறுகுமலரடி வளர்சடாடவி—புனைவோனே

வேலைநின்றெழு மாலமுண்டபொ டுலகுகிடுகிடு கிடேணவேவர-வேவுமிந்திர ஜாலமென்றிட வமுதினுணுமுன தருளின்வாழ்வுறு-வேதனுந்திரு மாலுமிந்திர ரமரர்முனிவரர் மனிதராயின—ரனைவோரே

ஞானமும்பரி பாகமுந்தரு தலைவனிவனென வறிவுநாடிட-நாடுநின்சிவ காமிகண்கொளு நடனசுகிர்தநல் வரசுகோதய-நாதவந்தமு மேகடந்திடு பரமகுருபர வமிதபோகசின்—மயரூபா .

நாககங்கண வேதரஞ்சக வனுதினமுமுன தடியர்வாழ்சிவ-லோகமும்பர போகமும்பெற வருள்பெருகுதிரி கமலலோசன-நாதவம்புலி யூரவென்றன துடலுமுறுபொருளுயிருமாசிய—பெருமானே. (அ)

குழிப்பு.

தானதத்ததன தனதன தானன
தானதத்ததன தனதன தானன
தானதத்ததன தனதன தானன—தனதானு

வாதபித்தகப நிலைதடுமாறிடு
மோசமெத்தவுள வினைவுமலானவ
வாயிலிற்சழியு மலதுருவாசனை—சகியாதே

வாய்திறக்குமுன முயிரதுபோய்விடு
மோர்கணப்பொழுது நிலையிலைவீணுடல்
வாழ்வுறக்கருதி யனுதினமேமன—மலையாதே

யாதுதுக்கசுக முறுவதுனதருள்
யாதுபெற்றிடுவ தொழிவதுனதருள்
யாதுபற்றுவது விடுவதுனதரு—ளெனவோரா

ஏதமுற்றபல வுயிர்களைநாடமு
ணேயிரக்கமொடு கனிவுறநாடுத
வீதன்மற்றுமுன் தருளைவிடாதுறல்—பெறுவேனே

வேதவித்தகமு னிவர்சனகாதியர்
மேதகக்கயிலை மருவுகலாவிடை
மேவுசிற்சொருப வொருமதுராபுரி—யதனூடே

வீதியிற்பலரு மிதெனவினோதமோர்
மாயவித்தையென நிறுவுகலாலையை
வேழமுட்கொளவு நினையுமனோகர—வதிலோலா

ஆதரத்தின்வரு மதியையுநீண்முடி
மீதுவைத்ததனொ டரவையுமேர்பெற
வாரமொத்தணியு மமிததயாபர—சிவலோகா

ஆரணத்தொனியொ டரியயனுதிகு
தூகலத்தர்தக ததிஙணதோமென
வாடுசிற்சபையி லருளுருவாகிய—பெருமானே. (கூ)

குறிப்பு.

தத்தந் தன தத்தந் தன தன
தத்தந் தன தத்தந் தன தன
தத்தந் தன தத்தந் தன தன—தனதான

கத்துங்கடல் சுற்றும்புவியில
னத்தந்தரு மைக்கண்களுமெதிர்
கற்குண்டல மிட்டேந்தியசெவி—மலராலே
கட்டுங்குழல் பட்டந்திகழ்நுதல்
செப்பந்தமு லைப்பந்தணிநகை
கற்கண்டமு வக்குங்கனிமொழி—யெனமாலாய்
நித்தந்தழு வற்கென்றலதொரு
வர்க்குந்தரு மத்தின்பயனுற
நெற்சிந்துமி மட்டேந்தருகிலர்—கடைநாயேன்
நிற்பந்தம னைத்துஞ்சொலியழு
தூக்கந்தனை முற்றுந்தொலைவுற
நிச்சஞ்சல முய்க்குஞ்சுகமரு—வருடாராய்
முத்தந்தவ ளச்சங்கெறிதிரை
மெச்சும்பரி சுத்தந்திகழ்சிவ
முற்கங்கையி லுற்றன்பொடுகுடை—பவராவார்
முற்றொருந்தவி னைத்திண்பிணிகெட
வைக்குந்திரு * வெட்டும்பெறவெதிர்
மொய்க்குஞ்சுரர் கட்குந்தலைமையு—மருள்வோனே

* திருவெட்டு-அட்டைசுவரியம்.

சித்தந்தெளி வுற்றங்கொருமல
ரிட்டஞ்சலி பத்தஞ்செயினவர்
சிற்றம்புலி சுற்றும்பணிபெற—வணிவோனே

தித்திந்திமி தித்திந்திமியொலி
திக்கொன்றந டித்தன்புருவோடு
சிற்றம்பல நிர்த்தந்திகழ்சிவ—பெருமானே. (ம)

குழிப்பு.

தனதன தந்த தனந்தந்த தன்னன
தனதன தந்த தனந்தந்த தன்னன
தனதன தந்ததனந்தந்த தன்னன—தனதான

மணிவடமுந்து தடங்கொங்கை மின்னிடை
வனிதையர்தங்க ளிடஞ்சென்று பொன்னென
வருணனைசிந்து பகர்ந்துண்டு நன்னெறி—யறியேனாய்

வருகமுனஞ்ச லெனும்பண்பினிங்ஙன
மெவருள ரும்ப ருளென்றஞ்சியென்னுள
மறுகிநடுங்கி வருந்துன்பமின்னமு—முறுவேனோ

பிணிகொடுவந்து தொழுஞ்சிங்கவன்மனை
முதிர்சிவகங்கை குடைந்தங்குமுன்னுறு
பிழையறநன்கொ ளிருந்தங்கவன்மனெ—னொருபேரோ

பெரிதருள்கின்ற வளங்கண்டுமென்னிவன்
மகிழ்வொடுவந்து கிடந்துய்ந்திலன்னனி
பிறகிடவுந்து மினென்றன்பர்சொன்முன—மெனையாளாய்

பணிவிடையின்றிய கங்கொண்டதுன்மன
முனிவர்குடும்ப மிடுஞ்செங்கை மின்வளை
பணிகளுநின்று கவர்தன்று துன்னிய—பரிவோடே

பணிலமுகண்டு பொலங்கஞ்சமின்னிய
மதுரையில்வந்து பகர்ந்தும்பர்நண்ணிய
பரவுகதம்ப வனந்தங்குமென்னுடை—யருளாளா

தணிவருடன்பி ணணங்கின்பநன்னல
விளமைதுறந்தவர் முன்சென்றுமுன்னுள
தகைமையுமொண்பதமுந்தந்தவின்னருண்-மறையோனே

சதுமுகனுந்தி கழுங்கொண்டல்வண்ணனு
மனுதினமும்பு கழுந்தொண்டுபண்ணுயர்
சபையிலுவந்து நடங்கண்டு மன்னிய—பெருமானே (கக)

குழிப்பு.

தந்தனத்தன தந்தன
தந்தனத்தன தந்தன
தந்தனத்தன தந்தன—தனதான

சங்கையற்ற மடந்தைய ரின்பவிச்சை மிகுந்தவர்
தம்பலத்தி னையுண்டுள—முழலாதே

சம்பவித்த பெருந்திரு வம்பர்முற்கொ டிரந்துசி
தர்தவித்தி டநொந்துமெய்—கருகாதே

சங்கடப்பி ணிகொண்டுதள ர்ந்துமெத்த வருந்திய
சஞ்சலத்தில் விழுந்தறி—வழியாதே

தங்குலத்த வருந்தகு பந்துவர்க்க முமுந்துறு
த்தமக்கி னசயும்பழி—மொழியாதே

செங்கையிற்க யிறுந்திய கிங்கரர்க்கு வெகுண்டுள
தென்புமுற்று மொழிந்துட—லொழியாதே

சிந்துறச்ச னனந்தவிர் கின்கணத்த வர்முந்திய
திர்ந்துதக்க வனன்றென—வடராதே

தெண்டனிட்டு னையஞ்சலி பந்தனத்து டனின்றயர்
சிந்தையிற்க ளிகொண்டுற விதுபோதே

தெண்டிரைக்கடலென்றிட கின்கடைக்க ணினின்றெழு
தென்படைத்த பெருந்திரு—வருடாராய்

கங்கையிட்ட கமண்டல‘மூந்திவிட்டி டுதும்பிமு
கம்படைத்த பெருந்தகை—யுடையோனே

கந்தமெய்க்கு றமங்கையி டும்பணிக்கு ளுவந்திடு
கந்தன்மெய்ச்சு வரந்தரு—மிளையோனே

கண்கொளப்பு டைகின்றனம கண்டுமெய்ப்புள கம்பெறு
கந்துகத்த னசுந்தரி—யொருபாலார்

கண்டகப்ப ரசுந்துகு ரங்கமூற்ற தடங்கையு
கந்தமெய்ப்ப டிவந்தனை—யுளமோவார்

பங்கயத்தி னரிந்திரர் பஞ்சவர்க்கொ ருசந்தினர்
பந்தமற்ற பதஞ்சலி—புலியோடே

பம்புநற்ற வரும்புனை செந்தமிழ்க்க வியின்பிர
பந்தநற்ப ணிதந்தணி—யுமவேர்ரோ

பந்தியுற்றெ திர்நின்றுக ரங்குவித்த ரசங்கர
பண்டையுற்பவ பஞ்சன—வெனநேரே

பண்புறப்பு கழ்மன்றமர் குஞ்சிதப்ப தமுந்திய
பஞ்சக்ருத்ய நடந்திகழ்—பெருமானே. (கஉ

குழிப்பு.

தனதன தத்தத் தனந்தனந்தன
தனதன தத்தத் தனந்தனந்தன
தனதன தத்தத் தனந்தனந்தன—தனதான

படியிடைமெத்தத் தவம்புரிந்துயர்
சனனமெடுத்திட் டிருந்துமிங்கொரு
பயனுமுறப்பெற் றிலன்பெரும்பொரு—ணசையாலே

படிறுமிகக்கெட் டலைந்துவஞ்சனை
கொலைகளவுக்குத் துணிந்துமங்கையர்
பலபலதிட்டப் புரிந்துமங்கவர்—பிறகேயோர்

கடிமலரிட்டுப் புனைந்தகங்குலை
யுவமையுரைக்கத் தகுங்கருங்குழல்
கனகமணிச்செப் பிரண்டெனுந்தன—மெனமாலாய்

கனியிதழைத்தொட் டருந்தவுங்கவி
னுடையைநெகிழ்த்திட் டிணங்கவுந்திரி
கசடனெனக்குற் றிரங்கியுஞ்சிறி—தருள்வாயோ

நெடியவன்முற்பட் டுவந்துபன்றியி
னுருவுகொடெய்த்துத் தலம்பிளந்துமு
னிலவியபுட்பத் துறைந்த்வந்தண—னனமாய்மேல்

நிமிர்வெளிமுட்டப் பறந்தெழுந்துமு
னடிமுடியைச்சற் றினுந்தெரிந்திலர்
நினதுருவத்தைத் தினம்புகழ்ந்துகை—தொழுமேலோய்

முடிமதிதத்துற் றிலங்குகங்கையி
னுனைநிகரப்பெற் றிருந்துபொன்பணி
முதிர்தளியுற்றுப் பொலிந்தமன்றிடை—யகலாதே

மொழிதருபத்தர்க் ககங்குளிர்ந்திட
முறையினடித்திட் டலர்ந்தகுஞ்சித
முளரிமலர்ப்பொற் பதந்தருஞ்சிவ—பெருமானே. (கரு)

குறிப்பு.

தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன தந்தத் தனதன
தந்தத் தனதன தந்தத் தனதன—தனதான

அஞ்சத்தனநடை ரஞ்சிப்பொடுசொலு
மின்சொற்குயிலிள வஞ்சிக்கொடியிடை
யஞ்சப்பளபளெ னுஞ்செப்பிளமுலை—மயலாலே

அந்திப்பொழுதொடு சந்திப்பதுதொழி
லென்றிப்புவியிடை நொந்துட்கவலையி
லங்கத்தைவிடலு நின்சித்தமுறுச—மதமாமோ

பஞ்சிற்படுதுய ரும்பட்டொழியின
தன்பிற்படவெதிர் வந்திட்டெனவருள்
பண்பிற்புரிவது நெஞ்சிற்கருணையு—மிலையேயோ

பந்தப்பழவினை யிந்தக்கணமற
முந்திப்பரமசு கம்பெற்றிடுநிலை
பங்கிட்டிடநல சந்தற்பமுமிது—வருவாயே

கொஞ்சக்கலைமதி யஞ்சத்தலைநிமி
ருஞ்சற்பமணிசி ரம்புற்றெனநுழை
குஞ்சிச்சடைதிக ழுஞ்சிற்பரவர—குருநாதா

கொங்கிற்பொலியுன தம்பொற்பதமலர்
கும்பிட்டனுதின மும்பத்தியின்மகிழ்
கொண்டர்ச்சனைபுரி யன்பர்க்கருள்செய்—மகிழ்வோனே

கஞ்சக்கழனிக ளுங்கற்பகமுற
விண்டொட்டிடுபொழி லும்பெட்புறுசிவ
கங்கைத்தடமுமி லங்கப்பெறுபுலி—நகருடே

கண்கொட்டுதலற முந்திக்கதிரொளி
குன்றக்கதிர்மணி மின்றத்துதல்கொடு
கங்குற்பகலறு மன்றுட்பொலிசிவ—பெருமானே (௧௪)

குழிப்பு.

தத்ததான தனத்தன
தத்ததான தனத்தன
தத்ததான தனத்தன—தனதானு.

அத்தியாச மெனப்படு மித்தையான புவிக்குள
நத்தமான வவித்தையின்—மிகையாலே

அட்டகாச மிகக்கொடு கெட்டகாரி யமுற்றுழ
லற்பமான வவத்தையி—லழிவேனே

சுத்திகார சிதத்தியல் புற்றமாயை சனிப்பது
துக்கமேயெ னவிட்டொழி—வறுசீரார்

சுப்ரகாச நிசச்சொரு பப்ரதாப மனைத்துணர்
சுத்தஞான மெனக்கருள்—புரிவாயே

பத்திஞான நெறிப்படு நிட்டைமேவி யமெய்த்தவர்
பக்கமார்த ருசிற்குரு—பரநாதா

பட்டிமாடெ னவிச்சைப டைத்தவாறு புசிக்கும
பத்தரான வர்கட்கயல்—படவாழ்வோய்

நித்தியாப ரிசுத்தவி லக்கணல யநிற்குண
நிட்களாவெ னமுற்படு—முரவோர்தாம்

நித்தமோதி யவித்தக சிற்சுகாம்ரு தபொற்பொது
நிர்த்தனும றைமெச்சிய—பெருமானே (௧௫)

குழிப்பு.

தனதனத்தந் தனத்தனந் தாத்தன
தனதனத்தந் தனத்தனந் தாத்தன
தனதனத்தந் தனத்தனந் தாத்தன—தனதான.

தரணியிற்சஞ் சலித்தடங் காப்பெரு
மதமுடைத்தந் தியிற்புலன் போக்கிய
தமியனைப்பந் தினைத்தினந் தாழ்த்திய—மூலமானோர்

தழுவுதற்கன் புவைத்துறங் காத்துயர்
பலபடச்சஞ் சலித்துழன் றூர்த்துடல்.
தமர்கொளச்சன் டனுக்கயர்ந் தாட்பட—விடலாமோ

கரணமுற்றுங் குவித்துநின் றூட்டிணை
மலர்களிற்பந் தனித்துநின் றேத்துறு
கரிசனத்தொண் டரிற்கலந் தூக்கம்—தகலாதே

கருதிமெச்சுந் தமிழ்ப்புனைந் தார்ப்பொடு
சரணெனத்தெண் டனிட்டுமுன் போற்றுறு
கருணையெற்குங் கிடைக்கமுன்பார்த்தருள்—புரிவாயே

முரணுடைத்திண் டிறற்பெருந் தார்க்கிக
ரவமுறப்பண் டொருத்திமுன் பேசிட
முயறவத்தன் பனைப்புகன் றூக்கிய—வருளாளா

முதிர்கருப்பந் தரித்தபைந் தார்க்குழ
லவள்கருத்தின் படிக்குமுன்றாய்த்திற
முறைபடைத்தங் கவட்குமுன் போய்ப்பெறு—புகழோனே

அரணறச்செந் தழற்பிழம் பேற்றிய
நகைவிளைத்தைங் கணைக்கரன்போய்ப்பட
வழலுதற்கண் படைத்தவொண் காட்சியை—யறிவானோர்

அனைவருக்கும் புலிக்குமங் காட்படு
மரவினுக்கும் புவிக்குநங் தாப்புக
ழவையிடைக்குஞ் சிதப்பதங்காட்டிய—பெருமானே (கசு)

குழிப்பு.

தனத் தனந்தன தான தனத்தன
தனத் தனந்தன தான தனத்தன
தனத் தனந்தன தான தனத்தன—தனதான.

மணித்தடங்கடன் மாநிலமுற்றவர்
தமைப்பொருந்திய வாசையனைத்தையு
மடக்கிநின்றெழு மேருநிகர்த்திடை—யிறுமாறே

வளைத்துமின்படர் தேமல்படைத்தவுன்
வனப்பிலங்குப யோதரமுற்றிடு
வதற்கருந்தவம் யாவரியற்றின—ரெனநேரோ

கணித்திருந்தன னுனைமெத்தவெ
னதிட்டமிங்கிது வாமெனமெச்சியொர்
கறுத்தபைங்குழல் கோதிமுடித்தொரு—விலைமானார்

கருத்திலன்புறு மேவலியற்றின
னுனைப்பணிந்தறி யேனைமதித்தருள்
கதிர்த்தகுஞ்சித பாதமெனக்கருள்—புரிவாயோ

ட ணிக்குவங்தொரு வேடர்குலக்கொடி
தனக்குமுன்புச லாமிடுமெய்ப்பிர
பலக்குழந்தைமு னேவருமத்திமு—கவனுனேன்

பயத்தவின்பல மானதனைப்பெற
வளித்தவின்பத யாபரநித்திய
பவத்துவங்தொட ராதவகைக்கருள்—வலியாலே

தணித்தவைம்புல நேயர்தமக்குள
மகிழ்ச்சியும்பர லோகமெனப்படு
தலத்தையுந்தம தாகவிடத்தகு—சுகவாழ்வே

சகத்தின்மூந்துறு போகமளித்தருள்
தழைத்ததண்கொடி யோடுநடித்திடு
தனிப்பெரும்புலி யூரகிலேப்பவர்—பெருமானே (கஎ)

குழிப்பு.

தானன தந்தன தந்தன தந்தன
தானன தந்தன தந்தன தந்தன
தானன தந்தன தந்தன தந்தன—தனதானு.

பூருவமின்றுவ ருங்கருமங்கொடு
பூமியில்வந்துபி றந்துழல்கின்றதொர்
பூதவுடம்பைய டைந்துமனம்புகு—வழிபோயே

போகமருந்திவ ருந்தியும்கைய
ராசைமிகுந்துப டுந்துயரொன்றல
பூதலமெங்கும லைந்துதினம்பொரு—ணசையாலே

காருணியம்பெரு குந்திகழ்குஞ்சித
பாதமறந்துநி னைந்திலனிங்குள
காலமுலர்ந்துடல் பொன்றிவிழுந்திற—முணராதே

காதககிங்கரர் தங்கையிலஞ்சுறு
வேதனையும்பட னன்றலவன்றெதிர்
காணநினன்பர்க ணங்களொடுந்தக—வருவாயே

போருதவும்படி வந்துபொருந்திறல்
வாணனுவந்துநி னைந்துமிகுந்துசெய்
பூசனைகொண்டுவ ரம்பலவுந்தர—மகிழ்வோனே

பூதரமென்றுசொ லுஞ்சிலைகொண்டவி
னோதகரம்பொடெ லும்புமணிந்திடு
பூடணவெங்கள்ப யங்கெடவந்தரு—ளெனவானோர்

சீருலவைந்தரு வின்கணிறைந்திடு
வோனுநலங்கமழ் பங்கயனுந்தகு
சீதரனும்புலி யும்பணியும்பணி—புகழோனே

சேமகரந்திக ழுந்திலையந்தணர்
காலமறிந்துதொ ழும்படிவந்தெதிர்
சேரமகிழ்ந்தொரு மன்றுணடம்புரி—பெருமானே (கஅ)

குழிப்பு.

தனந் தனத்தா னந்தன தந்தன
தனந் தனத்தா னந்தன தந்தன
தனந் தனத்தா னந்தன தந்தன—தனதானா

சிறந்தமுத்தா ரங்களசைந்தொளிர்
தனங்களுக்கே நெஞ்சமுழன்றனு
தினந்தவித்தே விஞ்சுபெரும்பொரு—ளுடையார்பால்

செறிந்தவித்தா ரந்திகழ்செந்தமிழ்
புனைந்துகத்தா வென்றுபுகழ்ந்தவர்
சினந்திடத்தாழ் வுண்டுமிரந்துள—மழிவேனோ

மறந்துவிட்டா லும்பசிகொண்டயர்
குழந்தையைத்தாய் தந்தையர்கண்டிடின்
மகிழ்ந்தெடுத்தா தங்கமொழிந்திட—வருளாரோ

மனங்களைத்தே னின்றினியன்புட
னறந்தழைத்தாள் பங்கொடுவந்தருள்
வளம்பெறத்தர நின்பதபங்கய—மிதுபோதே

துறந்தவர்க்கே சொந்தமெனுங்கயி
லையங்கிரிப்பா னின்றுதவம்புரி
தொழும்பர்கட்கா றங்கமுணர்ந்திட—வருள்வோனே

சொலுந்தமிழ்ப்பா வின்பமுணர்ந்துள
சுதந்திரத்தா லன்றுகொள்சுந்தரர்
சுகம்பெறற்கே சந்துநடந்திடு—மிறையோனே

பிறந்திறக்கா துந்தியகுஞ்சித
பதங்குறித்தே முந்தியவும்பர்கள்
ப்ரசங்கமிட்டே கும்பிடமன்றிடை—யகலாதே

பெருந்தவத்தோர் நந்திகணந்தக
ததிங்கணத்தோ மென்றுமுழங்கொலி
பிறங்கிடத்தா வும்பரதந்தரு—பெருமானே (கக)

குழிப்பு.

தன தனந் தனன தந்தன
தன தனந் தனன தந்தன
தன தனந் தனன தந்தன—தனதான

மணிகள்விண் டெறிதரங்கமு-லவுபெருஞ் சலதி தந்திடு
மகள்பணிந் தடிதொழுந்திரு—மடமானே

மருவவந் திடுகவென்றெழு-விரகமுந் தியகொடும்புலை
வறியனென் றெனதிடும் பைக—ணினையாதே

தணிவரும் பிணியினுஞ்சிறி-துனேநினேந் திலருமன்பர்க
டமையுறும் படிநினைந்தரு—டயையாலே

தளருமென் றனிமனந்தனி-லுனதுகுஞ் சிதபதந்திகழ்
தரவுவந் தருள்புரிந்திட—வருவாயே

பணிலமுந் துதரளந்திகழ்-கழனியின் கரைகிழிந்துடை
படமிகுந் தநறவஞ்செறி—பொழில்வானோர்

பரவவந் திழிதரும்பெரு-வழியெனும் படிவளர்ந்துறு
பலவளங் களுநிறைந்துள—தெனமேலோர்

அணிதரும் புகழ்நிரம்பிய-தில்லைவளம் பதியிலங்குறு
மழகுதங் கிப்பொனம்பல—மதனூடே

அமரர்வெம் புலிபதஞ்சலி-யரியயன் ஞெழுதுகும்பிட
வமலைபங் கொடுநடம்புரி—பெருமானே உம)

குழிப்பு.

தன தனத் தனதனத் தனதனத் தனதனத்
தன தனத் தனதனத் தனதனத் தனதனத்
தன தனத் தனதனத் தனதனத் தனதனத்—தனதான

பெரியவுப் பரிகையிற் சிலைவைத் தவரிடைப்-பணிவிடைக்
குரியவைச் சிலைவைத் தெளியவைப்-பிடியடித் திடுகெனத்
துயர்செய்துட் டவையும்வைத்—தொழியாதே

பிணிகொளச் சிலையிற் கிடைகிடத் தியெனைமற்-றெவர்நிக
ர்ப் பவனெனச் சிலைவைத் தொருநடைப் பிணமெனத் தெரு
விடைச் சிலைவிட் டிடுவினைத்—தொடர்பாலே

சுரிகுழற் பிறைநுதற் கரியகட் புருவவிற்-றுவரிதழ்த்தரள
மொத் தமுறுவற் குறுநகைத்-துணைமுலைக் கிணைசொலற்
கரிதெனப் பொறிவழிச்—சுழல்வேனே

துரிசறத் திருவுளத் தருள்கொடுற் பவமனத்
தொழிலறத் துவிதமத் துவிதமற் றிடுமுனற்
சுகமுறத் துரியநிட் டையிலிருத் திமகிழப்—புரிவாயே

திரிபுரத் தினையெரித் தொருகணத் தினின்மலர்க்
கணைதொடுத் தவனைநெற் றிவிழியிற் பொடிபடுத்
தியுமறைக் கிழவனைச் சிரமறுத் தியமனைக்—கிரிபோலோர்

திணியுடற் புவிவிழத் தளியுமற் றிருதிறத்
தசுரரைக் கொலையுறுத் திவிதியைத் தலையிறச்
சினவிமுற் கரியுரித் தழகுறப் புனைதிறற்—றெரிவானோர்

பெரிதுமெச் சிடவுமுற் றவருளத் தருளினைப் பெருகவிட்
டொருசிலர்க் குவிடையிற் பொதுவறப்-பிரியம்வைத் தழ
குறத் தரிசனத் தினையளித்—தெனைநேர்வார்

பிறர்களைக் கதியுறத் திருவுளத் தினிலமைத் தருளுருக்கொ
டுதிலைச் சபைநடித் தருளுமெய்ப்-பிரணவப் பொருளெனப்
புகழ்மறைச் சிரமுதற்—பெருமானே. (உக)

குழிப்பு.

தனன தன தந்ததான
தனன தன தந்ததான
தனன தன தந்ததான—தனதான

இமையவர்க ணங்களோனு முனிவரர்க ணங்களோனு
மினிவிடமெ னுங்கணாலு—முயர்வாலே

இவைபருவ தங்களாகு மெனுமிருத னங்களாலு
மெழில்பெறும டந்தைமார்செய்—மயலாலே

இனியகனி யென்றுதீப மதனில்விழு வண்டுபோல
விகபரமி ழந்துவீயு—மவரோடே

இணைபிரித லின்றிநேய மொடுதிரியும் வம்பனாகு
மிவனெனவி ரங்கிடாது—விடலாமோ

மையுடனெ ழுந்துவேட வடிவுகொட மர்ந்துகானி
லொருவர்துணை யின்றிவாயில்—வருமாறே

உளமிகவெ ருண்டுகூவி யுணர்வொழிய நின்றபாவி
* யுரியவனை யின்பமேவி—யதுவேயோ

உறுபிழையி றந்தையாக மழியவுமு யன்றதீமை
யொழிவதிலை யென்றபார—வருளாலே

உறவருளு கின்றநீயெ னிதயமுமு ணர்ந்திலாய்கொ
லுறுதிபெறு கென்றசேதி—புகல்வாயே

அமையுநெ ப விந்தமேழு பரியிரதமுந்துதாரி
யடைபடநி வந்ததாக—வதுகேளா

அவனியில ழுந்துமாறு கரமலர்த ரும்ப்ரதாப
னலைகடல டங்கவோர்தி—வலைபோலே

அமுதுசெயு மந்தணுள மலையமுனி யன்றுகாண
வழகுதிக ழுங்கல்யாண—வடிவோடே

அரியமறை நின்றுபூசை புரிபுகழ டர்ந்தகானி
லமர்தருசு யம்ப்ரகாச—வதிரூபா

சமயமிது வென்றுதாழு மடியவர்நி னைந்தவாறு
தரவருள்க னிந்தசீல—மறையோனே

சதுமுகனு மம்புராசி துயில்வருமு குந்தனோடு
தருவரச னும்பராவு—மிறைவோனே

தமனியவ ளங்கொண்மேரு வெனவெழில்வி ளங்குகோயி
றழுவிவளர் புண்டரீக—தலமீதே

சகலபுவ னங்கடோறு மொழிவறநி றைந்துவாழ்வு
தனைமருவு மன்றுளாடு—பெருமானே (உஉ)

---

* உரிய-அனையின்பம்.
தாயிடத்தின்பம்.

குழிப்பு.

தனன தந்தன தந்தன
தனன தந்தன தந்தன
தனன தந்தன தந்தன—தனதான

அவனி யின்கணோர் வன்கண-னசட னென்றும திந்தவ
ரலர்வி ளம்பின ரன்றியு—மகளிரால்

அறிவி ழந்தனன் வஞ்சக-நெறித விர்ந்தில னென்றுன
தருகு றுங்கண புங்கவ—ரெனைநேரா

இவனை யிங்குவ ரும்படி-யெவர்பு கன்றன ருந்துமி
னெனவ திர்ந்துவெ ருண்டிட—விடுவாயோ

இகப ரங்களி ரண்டினு-மினையி லின்பந லம்பெற
வினிது வந்தரு டந்திட—வருவாயோ

தவமு யன்றுப வந்தொலை-தரநி னைந்திடு சிந்தையர்
தமது ளங்குடி கொண்டொளி—வடிவானோய்

சதம கன்பிர மன்பது-மநயன ன்பல வும்பர்க
டருண மென்றுப ணிந்திட—வருள்வாழ்வோய்

சிவசி தம்பர வென்றனை-வரும கிழ்ந்திட நின்றனு
தினமு மன்றுண டம்புரி—பரிவாலே

செறிம ணங்கமழ் கொன்றையொ-டறுகு தும்பை யிளம்பிறை
செருகு செஞ்சடை யுந்திய—பெருமானே (உரு)

குழிப்பு.

தானதத்த தானதான தந்தன
தானதத்த தானதான தந்தன
தானதத்த தானதான தந்தன—தனதான

மாநிலத்தி லோடிநாடி யொண்பொருள்
தேடிமெத்த வாடியூடி மங்கையர்
வாயிதழ்க்க ணூறுதேற லுண்டனல்—மெழுகேயாய்

வாடிநித்த மாயவாழ்வெ னுங்கடன்
மூழ்குபித்தன் மோகமேவு சிந்தைய
வாவியற்ப மானதோர்சு கம்பெறு—விழைவாலே

மானமுற்று மேகவேதி ரிந்துழல்
தீனனுக்கு ஞானமேவு நின்பத
வாழ்வுபெற்று லாவுமாறு வந்தரு—டருவாயோ

* வாலிபத்தி லேறுவான வன்றிரு
வானசொற்க மோடுபாத லம்புவி
வாதனைக்கு மாளதாக நின்றிட—விடுவாயோ

ஓநமச்சி வாயவாழ்க வென்றுனை
யேதுதிக்கும் வாதவூரர் முன்புபெ
ணூமைவெற்றி பேசவேம கிழ்ந்தருள்—குருநாதா

ஓலமுற்ற நீலமேக னென்றுசொன்
மாதவற்கு மாசிலாவ னந்திக
மூர்த்தியற்கு நேயமோடு வந்தருள்—புரிபாதா

ஊனமற்ற பூதிசாத னந்தனை
யாதரித்த யாவராயி னுந்தின்
மோதுமுத்தி மேவுமாறு தந்திட—வருவோனே

ஓடையிற்ச ரோருகால யந்திகழ்
மாதர்மெச்சு சீர்பராவ ரும்புலி
யூரசிற்ச பாநடேச வென்பவர்—பெருமானே (உச)

---

* வாலிபம்-வெள்ளையானை.

குழிப்பு.

தானதான தந்ததன
தானதான தந்ததன
தானதான தந்ததன—தனதானா

நீதியாவ தொன்றுமறி-யாதபாத கன்கொடிய
நீலியாசை கொண்டுவெறி—கொளுநாய்போல்

நீடுபாரி லெங்கணுமு-லோபர்பால லைந்தவர்க
ணீர்மையேபு லம்பியுள—மழிவேனோ

பூதிசாத னங்கொடுநி-னாதுசீர்பு கழ்ந்துவரு
பூததேக மென்றுமரி—திதுவீணே

போய்விடாத கண்டபரி-பூரனோக மென்றசுக
போதவாழ்வு முந்தியருள்—புரிவாயே

மோதிராவ ணன்படமு-னாளிராமன் வென்றபழி
மூடவேய வன்பரிவின்—மிகையாலே

மூவராலு நின்றுதொழு-தேவதேவ வென்கவருண்
மூதராவ ணிந்தசிவ—குருநாதா

பாதிமேனி கொண்டசிவ-காமிநாத வென்பவர்கள்
பாலெநோர முங்கருணை—பொழிவாழ்வே

பாசநாச குஞ்சிதவி-லாசபாத பங்கயச
பாநடேச வெங்கள்சிவ—பெருமானே (௨௫)

குழிப்பு.

தந்த தத்ததன தனா தனந்தன
தந்த தத்ததன தனா தனந்தன
தந்த தத்ததன தனா தனந்தன—தனதானா

பொன்க லத்திலுணு மகாபுரந்தர
நின்ப ணிக்குரிய னிலாதவன்சிறு
புன்க ணற்குவறு மைதிரவுந்தரு—கெனவேயோர்

புந்தியற்பநர ை நாடொறுங்கவி
சொண்டி ரக்குமிடி யனேனலைந்துடல்
பொன்றி டச்சமத மெனுவிருந்திட—லருளேயோ

இன்க ருப்பிரத மிதாமெனும்படி
யன்ப ருற்றணித ருபாசுரந்தனை
யெங்கு மெச்சவரு ளுநீயிரங்கியெோர்—தயையாலே

என்று முற்றதுணை யெனுநினைந்துமு
னின்று னைத்துதிசெய் தெநேரமுந்தமி
யென்க ருத்துமுடி யுமாறுவந்தருள்—புரிவாயே

மின்கொ டிப்பொனனை யமாதுமுன்புரு
வொன்றெ டுத்தமுது வயோதிகன்புகழ்
மிஞ்சு சித்தனென வுலாவருஞ்சிவ—குருநாதா

விண்டு மத்தவிடை யிலேறியன்பர்கள்
கண்க லக்கமுற விடாமல்வந்தெதிர்
வெம்பு துக்கமொழி யவேவரந்தரு—பெரியோனே

நன்கு டைப்பலவ ளம்ர்சிதம்பர
மென்ற வற்புதத லமேவியம்பிகை
நங்கை யுத்தமிசி வகாமியன்புற—வயன்மாலே

நங்க டற்பரவ ணிநீலகண்டவ
கண்ட சிற்சுகவெ னவாடுபெண்புறு
நம்ப மெய்த்தனிந டராஜவென்பவர்—பெருமானே (௨௬)

குழிப்பு.

தத்தத் தனந் தனனதான
தத்தத் தனந் தனனதான
தத்தத் தனந் தனனதான—தனதான

கொத்துற்றமஞ் சனையவோதி-மைக்கட்பிறங் குகணைதாவு
கொப்பிட்டணிந் தசெவிதேமல்—படர்சீரார்

கொற்றத்திலங் குமதயானை-யொத்திட்டிணங் குமுலைமேவு
குட்டிக்கணங் குநிகரோசொ—லெனுநாயேன்

சித்தத்தையுன் றனதுபாத-பத்மத்தில்வண் டெனவுலாவு
திட்டத்தையுஞ் சுருதியோது—திருநீறே

சித்திக்குமென் றுமுளதான-முத்திக்குநன் றெனவிடாத
சிட்டத்தையும் பரிவினோடு—தருவாயே

முத்தத்தையுந் துகடன்மீது-சற்பத்துறங் கியமுராரி
முற்பத்திகொண் டுபுரிபூசை—யதிலேயோர்

முற்பட்டபங் கயமிலாமை-யெய்த்துத்தனங் கணையுநாது
முத்தப்பதம் புனையுநேய—மதனாலே

மெத்தப்பெருங் கருணையோடு-சக்ரத்தையன் றருளுதார
மெச்சத்தகும் ப்ரபலமான—புகழாளா

வெற்றிச்சிதம் பரநடேச-முக்கட்பரம் பரமெய்ஞ்ஞான
வித்தைப்பழம் பொருளுமாய—பெருமானே (௨௭

குழிப்பு.

தனதன தனுதான தந்த தானன
தனதன தனுதான தந்த தானன
தனதன தனுதான தந்த தானன—தனதானு

விரகமதனுலேய லைந்துபாவையர்
முலையிணையின் மீதாரு மின்பமேபெற
விழைவினெடு வாயூற லுண்டுவாடியு—மயலாலே

வினைவினவ ராலேவு மெந்தவேலையு
நொடிபுரியு மாபாத கன்கிராதகன்
மிடியனுத வாமூட னென்றுநீயெனை—யிகழ்வாயேல்

உரகவணை மீதேயு றங்குமாயனு
மறைபுகல்வி தாதாவு மின்றுகாவென
வுனையொருச தாகால மும்பராவுவ—ரிவரோயோ

உறுதிதரு வாராவ ரின்பவாழ்வுற
நினையலது வேறேயு மெங்குளாரினி
யுளமகிழ்வி னேடேழை யென்கணீயருள்—புரிவாயே

பரவுமுல கேழு மஞ்சவேகிடு
கிடெனவரு மாலால முண்டுவாழ்வருள்
பரம்கரு ணாசாக ரன்பராபர—னெனநேரோ

பரவியடி மீதார வந்துதாழ்பவ
ரவரவர்ம னேபாவ மெந்தவாறவை
பரிவினருள் சீர்பாடி நின்றுசேடனை—முதலானோர்

அரகரம காதேவ வென்றபேரொலி
திசையுழுது மேலேறி யண்டமேவுறு
மழகியசி தாகாச மன்றுளேயிள—மதியோடே

அலைபுனைச டாபார முந்திவீசிட
வமரர்மிகு பூமாரி சிந்தவேயெதி
ரமலையொடு வாதாடிமுந்தியாடிய—பெருமானே (உஅ)

குறிப்பு.

தானதனத்தன தானத் தனதன
தானதனத்தன தானத் தனதன
தானதனத்தன தானத் தனதன—தனதான.

கோழை மனத்திக வாழ்விற் படுமதி
வேதனையிற்சுழ லாமற் கதமுறு
கோர நமற்பட மாய்வித் தருளுநி—னடியார்பால்

கூடு வதற்குள நேயத் தொடுகவி
பாடி நினைத்தொழு தாலற் புதவருள்
கூர வளிப்பத லோவுத் தமநெறி—யறியாயோ

ஏழை யெனைப்பரி சோதிப் பதுதகு
மோத ருணத்தினி னீயிப் படிவிட
லேபு கழுக்கழ கோமெய்த் தவருனை—நகையாரோ

ஈதலதற்பவி வாதத் தவரிவ
ணூர்சி வபத்தியி லேதுற் றனனென
வேசு வதற்கிட மாமற் றிதனையு—நினையாயோ

பாழைவிடுத்துட னேயப் புறமெழு
சோதி யிடைத்துயில் வோர்கட் கவர்பரி
பாக மதெப்படி யோவப் படியருள்—செயுமேலோய்

பாசு பதத்தைமு ளூர்ச் சுனனுறு
மாறு கொடுத்தவு தாரப் பெருமைய
பார மெனப்புகழ் வார்தத் தம்துள—நிறைவோனே

மாழை மணிப்பொது மீதுற் றமையுமை
மாது தனிச்சிவ காமிக் குளமகிழ்
வார நடித்தருள் சேவைக் கனுதின—நசையாலே

வாழ்பு விகட்செவி யாதிப்புலவர்க
டான தனத்தன தானத் தனவென
மாச றுக்கற்புட னுடித் தொழுசிவ—பெருமானே (௨௬)

குழிப்பு.

தான தந்தனத் தானன தான தானன
தான தந்தனத் தானன தான தானன
தான தந்தனத் தானன தான தானன—தனதானு.

தோடலர்ந்தபொற் றும்மை மீதுலாவிய
தோகையென்றுவப் பானுனை யாடிமாமயல்
சூழநின்றவர்க் கேவல்செய் வேனேயோவிது—விதியேயோ

சூதொழிந்துனக் காவலி னுலெநேரமு
மோதுமன்பனைக் காணில்வி ரோதமேமிகு
சோரனிங்கெனக் காருப காரமேசெய்வர்—தலமீதே

மூடநெஞ்சனேப் பாதகலோபனுகிய
கோபவஞ்சனேப் பாவைய ராசைமேல்விழு
மோகவம்பனேத் தீதில்வி வேகநேயநல்—வெகுநூலான்

மூதுணர்ந்தமெய்க் காவல னேயெனுநனி
கூறினுங்கொடுப் பாரிலே யாதலாலினி
மூவர்தங்களுக் கோர்துணே யாமுனுதருள்—புரிவாயே

பாடலஞ்சிவப் பானவ சோகுபூகமும்
வாழைதெங்குமிக் கானபு னுக * மாழைகள்
பாகல்சந்தகிற் சூதமு மாதிசூழ்தரு—பொழிலூடே

பானுவின்பரித் தேர்வல சாரிபோய்நுழை
மாசிதம்பரப் பேரணி தானமீதமர்
பாய்விசும்பிடைத் தாவொளி வீசுதேசிக—மயமேயாம்

* மாழை-புளிமா-பாகல்-பலா-சந்து - சந்தனம்.

ஆடரங்கிடைப் பாய்புலி சேடனுடவு
மோதுபங்கயத் தோனொடு மாயனுடவு
மாயிரங்கணிற் காணம ரேசனுடவு—மகிழ்வாலே

ஆரணங்கண்மெய்த் தாபதர் பாடியாடவு
மேவும்ம்புவிப் பாடகர் தோடிபாடவு
மாதரங்கொளச் சீரடி வீசியாடிய—பெருமானே (௩௮)

குழிப்பு.

தய்யதா னந்தனன தனதனுதன
தய்யதா னந்தனன தனதனுதன
தய்யதா னந்தனன தனதனுதன—தனதானு

பொய்யெலா மென்றுமுறைப் விடமிதாமென
நெய்யுலா வுங்குழலின் மலரின்மேல்விழு
புள்ளெனு நின்றெனது மனதுபோய்விழன்—முறையேயோ

பொல்லரா குஞ்சிறிய வறிவிலாரொடு
வல்லைபோய் வம்புமொழி குவதலாலயர்
புல்லனே னின்புகழை மொழிவதேனுள—மிசையாதே

மெய்யெலா முந்தவள மருவுநீறணி
செல்வரா மன்பர்பணி விடையிலேயொரு
வில்வமே னும்பரிவி னுதவிலேனிது—நெறிதானே

வெய்யகா லன்கொடுமை செயுமநாளினி
லையகோ வென்றுறவி னவரழாவகை
வெல்லுமா றிங்குனது கருணையேதர—வருவாயே.

அய்யராய் வந்தொருவர் பசிபொறுதமர்
கையிலே சொன்றிகொடு வருதயாபர
னல்லவோ வன்றியுமு னடியர்தாகம்—தணியோரா

அள்ளிநீ ருந்தரும றையவனுகியொர்
பொள்ளலார் பந்தரிடை வதியுமாரிய
வல்லிசேர் கொன்றையினெ டறுகுமேபுனை—முடியோனே

செய்யிலா ருங்கமல மிசைவராலுகள்
பொய்கைசூ ழும்பொழிலி னிலவுநீர்தரு
செல்லுலா வுஞ்செழிய வளமளாவிய—புலியூர்சேர்

தில்லைவா ழந்தணரு ளொருவனுகியொண்
மல்லலா ருங்கனக சபையுளாடிய
தெய்வமே நம்புமவர் களைகணேசிவ—பெருமானே (௩௧)

குழிப்பு.

தந்த தானதன தந்தன தனதன
தந்த தானதன தந்தன தனதன
தந்த தானதன தந்தன தனதன—தனதானு

மஞ்சு லாவுகுழன் மங்கையர் கலவியி
லெந்த நேரமும்வி ரும்புவ தலதுனே
வந்த னுதிகள்பு ரிந்தொரு மலரிட—நினையேனுர்

வம்பு பேசுவதை யன்றியு னதுசரி
தங்க ளுவிலுநி னைந்தறி கிலன்முழு
வண்டரோ டுறவு கொண்டலை குவனிவ—னெனநீயே

கொஞ் சமாகிலுமி ரங்குவ திலையெனி
லஞ்சு மாறுவரு கின்றந மன்மிகவெ
குண்டு சீறுபொழு தென்புக லுவனிது—முறையாமோ

கொங்கு லாவுமமு தந்தரு குரைகடல்
பொங்கு மாமடைதி றந்தென நனிபெரு
குங்க ணூரருளி லிங்கொரு சிறிதருள்—புரிவாயே

தஞ்ச நீயெனவு வந்தனு தினமகிழ்
செஞ்சொன் மாலைகள்வ னைந்தடி பணிபவர்
தங்கள் வேலைசெய விந்திரர் தமைவர—விடுவோனே

தந்தி யீருரிபு னைந்துள பணிகளை
யுங்க லீரெனுமெ லும்புக ளையுமணி
சங்க வார்குழையை யும்புனை தருமெழி—லுடையோனே

வஞ்ச மாயவிரு ளுந்துச னனமர
ணங்க ளாலறவெ குண்டர கரவென
வந்து தாழ்பவரு ளங்குளிர் தரவவர்—குழூவூடே

மந்த மாருதமு கந்தெறி பொழினிமிர்
புண்ட ரீகபுர நின்றொளிர் தமனிய
மன்று ளாடியருள் குஞ்சித பதசிவ—பெருமானே. (கஉ)

குழிப்பு.

தனதன தனதத் தனந்த னனதன
தனதன தனதத் தனந்த னனதன
தனதன தனதத் தனந்த னனதன —தனதானா

அன்வர தமுமுய்த் துணர்ந்து வனிதையர்
கடிதட நாகிற் கிடந்து மயலுறு
மனுபவ மதனிற் சுழன்று பொறிவழி—யலையாதே

அணிமலர் கொடுநிற் புனைந்து னடிமிசை
யசைவற நினைவுற் றிருந்து சிவசிவ
வரகர வெனமுற் பணிந்து முயறவ—வலியாலே

உன்தரு ளமுதப் பெரும்பு ணரியிடை
யடியவர் பலர்புக் கழுந்தி யவரவ
ருளமிக மகிழ்விற் பணிந்து விரவுவ—ரடியேனை

உலையிடு மெழுகிற் கரைந்து பலபல
துயர்புரி வறுமைக் கிடங்கி லொழிவற
வுழலுவ னெளியற் கிரங்கி யருளவு—நினைவாயோ

முனமரி யயனுக் ககந்தை முடுகவு
மெரிமலை வடிவுற் றிருந்த விருவரின்
முரணற வருளிற் பொலிந்த பெருமையின்—முதலோனே

முதுகிரி நதியுற் றிடும்பொ ருளைநிறை
கமலையி லுளபொற் றடந்த னிலுதவி
முறைபுரி யடியர்க் கிதஞ்செய் வதுதொழி லெனவாழ்வோய்

கனவிலு முனைமெச் சுகின்ற வொருமுது
கிழவியு தவுபிட் டருந்தி வருநதி
கரையடை படமட் சுமந்த திருவரு—ளுடையோனே

கருணைபொ ழிகடைக் கணுங்க ரமலரு
மபயவ ரதமெய்த் திறங்க வினவளர்
கனகச பையினிர்த் தனம்பு ரியமகிழ்—பெருமானே. (௩௩)

குழிப்பு.

தந்தத்தான தனந்தனதனன
தந்தத்தான தனந்தனதனன
தந்தத்தான தனந்தனதனன—தனதான.

தந்திக்கோடு தனங்க ணீலம்லர்
கம்பிக்காது தழைந்த வூசலிணை
தங்கத்தோடு புனைந்த தாகுமென—விலைமாதர்

தங்கட்காவ லுறும்ப சாசனைய
வெண்கட்பாரி விரங்கு வாரெவர்நி
தந்திட்டாரெ வரென்செய் வேனரிய—வினையேனைய்

இந்தக்கால மொழிந்த தாயினினி
யென்றைக்கோவு னதன்ப ரோடுறுவ
தென்கெட்டேனிவை கண்டி லாய்கொலெனை—யிதுபோதே

இன்பப்பார்வை கொடன்ப நீகமது
செம்பொற்ருள்க ளுவந்து வேறுநினை
வின்றிப்பாடு கவென்றி லேசமருள்—புரிவாயே

முந்தப்போரி லடர்ந்த சூரபது
மன்கைக்கேவெ ருவும்ப ராதியருன்
முன்புற்றேய பயம்ப ராபரவெ—முயிர்காவாய்

மொய்ம்பற்றேமெ னவுந்த யாவினொடு
மந்தச்சால மிகுந்த தானவர்கண்
முஞ்சச் சாமி யெனுங்கு மாரனையு—தவுமேலோய்

பந்தப்பாழ்வி னையுந்து காருணிய
நின்கட்பார்வை நினைந்து ளேயுருகு
பண்புற்ருேர ணிசெஞ்சொன் மாலைபுனை—புயமீதே

பங்கப்பார வெலும்பி னேடுதலை
யும்பொற்ருரி னணிந்த தேவதிகழ்
பைம்பொற்கோயி லின்மன்று ளாடுசிவ—பெருமானே. (நச)

குழிப்பு.

தனதனன தானதான
தனதனன தானதான
தனதனன தானதான—தனதான

உலகிலுள சீவராசி-பலவுமநேககோடி
யுருசனன மாகியேநல்—வினையாலே

ஒருகுறையு மேயிலாத-மனிதவடி வானபோது
முனையுணரு நீதிசேர்த—லரிதாமே

அலகிறவு மோடுனாது-திருவருளி னுலலாது
னடியிணைகள் பாடுமாறு—மெளிதாமோ

அரைநிமிட மேனுநீசொன்-மறைவழிநி லேனெவாறு
னருள்பெறுவ னேவையாநி—னுளம்யாதோ

புலவர்பலர் கூடியாடு-கடிமணமு லாவுகாலை
புகழ்கயிலை தாழநேரு—மதுபோதே

பொதிகைமலை மீதிலேறு-கலசமுனி யாமெனாது
புதியவடிவே யெனுமுன்—மொழிவோனே

நிலவியக லாலின்மேவு-புனிதரொரு நால்வர்காண
நிறுவுகுரு நாதனாகி—வருவோனே

நிருமலவ நாதிதேவ-சுகுணசிவ காமியோடு
நெடியசபை மீதிலாடு பெருமானே. (௩௫)

குழிப்பு.

தனத்தான தனத்தனன
தனத்தான தனத்தனன
தனத்தான தனத்தனன—தனதானா

நரைத்தாலு மலர்க்குழலை-யிருட்போலு மெனப்புகல்வ
னடுக்கோடு திரைத்தமுக—மதிபோலே

நமக்காகு மெனப்புகல்வன்-முலைத்தோலை மலைக்குநிகர்
நயப்பாகு மெனப்புகல்வ—னிவனேயோ

விரைத்தாளி ணையைத்துதிசெய்-தருட்காவல்
கொளக்கடவன் விடுத்தேகவகற்றுமென—வெகுளாதே

மிகத்திய வினைக்கடலி-னெடுத்தேழை யெனைக்கருணை
விருப்போடு கடைக்கணருள்—புரிவாயே

உரைத்தாலு முரைப்பளவு-நினைத்தாலு நினைப்பளவு
மொருக்காலு மளக்கரிய—வுரவோனே

உனக்கேய டிமைத்தொழிலை-மலர்ப்பால னலைப்பால
னுவப்பாகி யியற்றவுள—மகிழ்வோனே

இரைத்தாக மவித்தகரு-மறைக்கான நலத்தவரு
மெழிற்றேவ நகர்க்கிறையு—முறையாலே

எடுத்தோது புகழ்க்கனக-சபைத்தாவி நடித்துமைமி
னிடத்தாவல் படைத்தசிவ—பெருமானே. (௩௬)

குழிப்பு.

தனன தனனதன தத்தாதானன
தனன தனனதன தத்தாதானன
தனன தனனதன தத்தாதானன—தனதான

தரணி முழுதுமொர்கு டைக்கீழாள்பவ
ரரசு பகையினர்கொ ளப்போய்மாய்குவர்
சரத மலவிதெனு மிக்கோர்வாய்மொழி—யதுகேளேன்

சரண மெனவுனைநி னைப்போராகிய
வடிய வருறையுமி டத்தேபோயொரு
தரமெ னினுமவர்க ளைப்பாரேனவ—ரொடுசேரேன்

முரணி மதவெறிபி டித்தேதோள்வலி
மகளி ரிடுசிறுதொ ழிற்கேயாவலின்
முயலு வனதிலெவர் கட்கேயாகிலு—முளநாணேன்

முடிவி லுளதினதெ னத்தேரேனனன்
மெழுகெ னவுருகுமெ னேப்போபோவென
முழுதும் விடுநினைவு னக்காகாதினி—யருளாயே

கரண மொடுபொறிக ளிற்சாராதுனை
நினைவ றநினையுமு ளத்தூடேவளர்
கருணை பொழிவிழிப டைத்தோய்மால்விடை--வருவோனே

கமல வனநிகர்வ னப்பாமேனியின்
விமலை யெனுமலைம கட்கோர்பாலமர்
கணவ னெனவருமு தற்றேவாவினை—வலியாலே

மரண மொடுபிறவி யிற்கீழ்மேலுறு
முயிர்க ளுறுபழவி னைக்கீடாயவர்
மருவு பயனுதவு கத்தாவாய்மல—மொழிபோதே

மதிப ணிநதியுமொ ளித்தேமானுட
வடிவு கொடருளுவ தற்கேசேர்குரு
வரக னகசபைந டித்தேவாழ்சிவ—பெருமானே. (௩௭)

குழிப்பு.

தனதனன தனதனன
தனதனன தனதனன
தனதனன தனதனன—தனதான

எனதுபுவி யெனதுபொரு-ளெனதுமனை யெனதுமக
வெனதுபணி யெனதுரிமை—யிவர்நேரே

எனதுபகை வரிவரென-துறவினவ ரெனுமிவரு
ளியமன்வரு பொழுதிலெவர்—துணையாவார்

இனியொழிக விவைநம்து-பரமபதி யடிதொழுக
வெனுமவர்த மொழியெனது—செவியேறு

இகபரமு மழிவில்சுக-மடையவிழை வுறுவனெனை
யெனபுரிவ துனதுதிரு—வுளமேயோ

கனமருவு மரியயனு-முதகமொடு வளியுணவு
கருதிமுய லரியதவ—மதியாதே

கனலிடு மெழுகின்மன-துருகியுனை நினையுமவர்
கடமையெதிர் கொளவருதிண்—விடையோனே

புனல்பெருகு தடமுலவு-பணிலமெறி மணிநிலவு
பொழியவிரு ளகல்பொழில்க—ணிமிர்வானோர்

புரமகளிர் புனையமல-ருதவுபுலி நகரில்வளர்
பொதுவிலரு ணடனமிடு—பெருமானே. (௩அ)

குழிப்பு.

தனந்தன தனந்தனன தந்த
தனந்தன தனந்தனன தந்த
தனந்தன தனந்தனன தந்த—தனதான

இடம்பட விடும்பைக ணினைந்து
கொடுந்தொழில் புரிந்திடு வரன்றி
யிரங்கியொரு சிந்துமி யுமன்பர்—கொளவீயார்

இருந்தென விறந்தென சொலென்று
புகன்றுபிறர் தம்பொருள் பிடுங்கி
யிழிந்தபல மங்கையர் களின்ப—விழைவாலே

கிடந்தவ ரிடும்பணி மகிழ்ந்து
படுந்துய ரறிந்திலெ கொலின்று
கெடும்பரி சொழிந்தன துகஞ்ச—மலர்போலே

கிளர்ந்திலகு குஞ்சித பதங்கை
புனைந்திர விலும்பக விலுஞ்சு
க்ருதம்பெற வரஞ்சிறி துகந்து—தருவாயே

கடம்பவன சுந்தர தவஞ்செய்
விலங்கல ரயன்கும ரியன்பு
கலந்திட மணம்புண ரவந்த—விறையோனே

கரும்பென விரும்பும் வர்தங்க
ளுளங்களி கொளும்படி நிறைந்து
தனிந்தொழுகு கின்றவ முதம்பொ—ழிகுவோனே

திடம்படு தவம்பல முயன்று
படங்கொள ரவம்புலி பணிந்து
தினந்தரி சனம்பெற வுநின்று—வளர்சீரார்

சிதம்பர தலங்குல வுமன்று
ணிரந்தர பதந்தர வுவந்து
சிறந்தரு ணடம்பயி லுமெங்கள்—பெருமானே. (௩௬)

குழிப்பு.

தனனத்தனதன தத்தனதானன
தனனத்தனதன தத்தனதானன
தனனத்தனதன தத்தனதானன—தனதானு

மனிதப்பதரிவ னைப்புற மேவிடு
மெனவிப் புவியினி டத்தவ ரேசவு
மறுகித் தினமும்வ யிற்றுவி சாரம—தொழியாதே

மருவிக் கயவர்த மக்கரு கேயவர்
மகிழக் கவிதைசொ லித்திரி வேன்வரு
மறுமைக் குறுபய னைக்கரு தேனுட—லுளபோதே

வனிதைக் கொடியர்பு டைத்திடு வாரெனி
லழகிற் றிகழும லர்க்கர நோமென
வசனித் தவர்கள்சு கத்திலெ நேரமும்—விழுநாயேன்

மனதைப் பெரிதும டக்கிவி டா துகொ
லுலேயிட் டெரியில்வெ துப்புவதேஙிகர்
வறுமைக் கடலினெடுத்தெனை யாளவு—நினையாயோ

புனிதச் சிறுவரெ னப்படு காழிய
ருறையப் படுமட முற்றெழு தீயொடு
புரையுற் றசெழிய னைப்பொரு தீயுமொர்—திருநீறே

புனைமெய்ப் பதிகமு ரைத்திடு போழ்தினி
லொழியப் புரிகரு ணைக்கடலேமறை
புகழ்வித் தககயி லைக்கிறை யேமதி—புனைவோனே

நனிவற் றியுடன ரைத்தவ யோதிக
னெனமுற் கவுரிய ருத்தமு தார்தரு
நசையுற் றிளவலெ னச்சிறு பாலக—னெனவானேய்

நளினப் பதமலர் கட்கும் றுலய
முதவுத் தமர்பெறு சிற்சுக மேயரு
ணட்னத் தழகிய பொற்பொது வார்சிவ—பெருமானே.(சுல)

குழிப்பு.

தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன
தனத்தனன தனத்தனன—தனதான

மலர்க்கரிய குழற்கும்வரி-சிலேக்குநிகர் நுதற்குமுக
மதிக்கும்மயில் விழிக்குமிழை—யிடைபோகா

மலேக்குநிகர் முலேக்குமொரு-பிடிக்குளமை யிடைக்குமிக
மயக்கமுறு மனத்தையினு—மலேயாதே

சொலற்கரிய பதக்கமல-மலர்க்குமல மறுக்குமுன
துணைக்கருணை விழிக்குமிள—நகையோடே
சொலிக்குமுக மலர்க்குமுற-விசைத்தசைவ றவைத்தரிய
சுகத்தையனு பவிக்கவரு—டருவாயே
விலக்கரிய தடக்கரட-மதக்கரியையுரித்த்வதள்
விரித்தணியு மறக்கருணை—யுடையோனே
வியக்குறும துரைக்கரசி-கயற்கணியை மணப்பவிறல்
விடைக்கணெழு தரற்குமகி—ழிறையோனே
இலக்கணமு மிலக்கியமும்-விளக்கியபு லமைதலைமை
யெவர்க்குமுள மகிழ்ச்சிதரு—புலவோனே
இமைப்பொழுது நினைப்பவர்க-டமக்கரிய பதத்தையரு
ளெழிற்கனக சபைக்குள்வளர்—பெருமானே. (௩க)

குழிப்பு.

தனத்தனன தனதானன
தனத்தனன தனதானன
தனத்தனன தனதானன—தனதானு.

இரக்கமொரு சிறிதாயினு-நினைப்பதிலை யெவர்பாலுமி
விடத்திலுயி ரதுபோய்விடு—மெனவேபோய்
இரப்பவர்த மையுமானம்-தறக்கொடிய மொழியாலெரி
யிறைப்பதென வசைபேசுவர்—முனிவாலே
பரத்தையர்கண் மிகுசோரர்க-டமக்குமுடை யறவீகுவர்
பரப்பினெடு மிவர்பாலின—மிரவாதே
பழிப்பில்சுக முறவேயெனை-விடுப்பதுவு முளதோதுயர்
படப்புரிவ தொழியாதுகொல்—புகல்வாயே

கரத்திலுறு சிலைவேடுவ-னெனக்குறுகி விரகால்வரு
கருத்தபெரி யவராகம—தனையேயோர்

கணைக்கிரையி டுபுநேர்வரு-மருச்சுனனை யமராடிமெய்
களைக்கமுது குமைகாணென—வெறிவோனே

தரக்கருணை பெறுவானவர்-குலக்கொடியொ டலர்மாரிக
டரைத்தலம றையவேபொழி—புலியூர்வாழ்

தகத்தகத கெனவேயொளிர்-தனிக்கனச சபைமீதருள்
தழைக்கநட மிடுமோர்சிவ—பெருமானே. (சஉ)

குழிப்பு.

தனதான தானதானன
தனதான தானதானன
தனதான தானதானன—தனதான

சகவாழ்வி லாசையேமிகு-கொடியேனி லாமையாலவ
சரமாக வோடிலோபரை—யனதாதா

தனதாத யாளனேயென-வுரையாடி யேயனூர்தரு
தனமோவெ லாமுமாமயல்—வழிவீசா

வெகுவீன மானமாதர்தம்-வசையேபொ றுதெனுதுடல்
விரிதீயி னூடுமேவிய—புழுவேபோல்

மெலிவேனை யோவிதேதென-வயர்வேனி வாறுநீயெனை
விடலோத காதயாவினி—யருளாயே

மகவானும் வாரிசாதன்-மறையோனு மாலுமாரழன்
* மதியாத வாதிதேவரு—முனையோர்நாள்

* மதியாதவாதிதேவர்
சந்திரசூரியாதிதேவர்கள்.

ம்தியாதி யாகமார்தரு-மவியூணி லாவலாயுற
மதகோப வீரனுயவ—ரெதிர்சீறு
உருமாறு வேறதாயுட-லவமான மேசெய்தேபினு
மொருதேவ தேவனேயென—வருள்வோனே
உலவாத வேதமோதிய-புலியூரில் வாழ்சபேசமி
னுமைபாக நேயனேசிவ—பெருமானே (சுரு)

குழிப்பு.

தனதன தனன தானதந்த
தனதன தனன தானதந்த
தனதன தனன தானதந்த—தனதானு

அழகிய நடையி லேயரம்பை
யெனவொளிர் துடையி லேநுடங்கி
யசைதரு மிடையி லேநிதம்ப—மதன்மேலே
அலைதிகழ் மடியி லேபசும்பொன்
மலைநிகர் முலையி லேநிறைந்த
வணிமுக மதியி லேசிவந்த—கனிபோலே
கழிசுவை யிதழி லேவளைந்த
சிலைநிகர் நுதலி லேயிணைந்த
கணைநிகர் விழியி லேபிணைந்த—மலராலே
கவினுறு குழலி லேகனிந்த
வமுதெனு மொழியி லேகிடந்த
கடியவென் மனதி லேயுவந்து—வருவாயே
பழகிய விடையி லேயெழுந்து
ணடியரு ளமுதி லேநடந்து
பலமறை முடியி லேயிருந்த—வுரவோனே

படர்திரை நதியி லேதுளைந்து
முழுகுறு கலேயிலேகுறைந்த
பனிமதி சடையி லேபுனைந்த—வழகோனே

நிழறிகழ் பொழிலி லேபொழிந்த
மதுநிறை வயலி லேவளர்ந்து
நிமிர்கம லமதி லேயனங்கள்—விளைழவாலே

நிறைபுலி நகரி லேபணிந்து
தொழுமவர் குழுவி லேயுயர்ந்து
நிலவியபொதுவி லேநடஞ்செய்—பெருமானே (சச)

குழிப்பு.

தந்த தத்ததன தான தந்ததன
தந்த தத்ததன தான தந்ததன
தந்த தத்ததன தான தந்ததன—தன்தானு

வஞ்ச கக்கொடிய பாதகம்பழியி
தஞ்சு தற்குரிய தாகுமென்றெவர்கள்
வந்து ரைப்பினுமி தாகிதஞ்சிறிது—மறியாதே

மங்கை யர்க்குமய லாகியுங்கொடிய
வம்பர் கைக்குளுற வாகியும்பிறரை
வந்த னித்துநிதி தேடியும்பொழுது—படலாமோ

நெஞ்சி ரக்கமிலெ யாமெலிந்துமிகு
துன்பமுற்றவரை யாருநன்குணரி
னின்று சற்றுவின வார்கொலிங்கிதுவு—நினையாயோ

நின்ப தக்கமல மேநினைந்தழுது
தஞ்ச முற்றவெனை நீவிடும்பரிசு
நிந்தை யிற்படுமெ னுநினைந்தினிதி—னருளாயே

செஞ்சொ லிற்புனைய மாலைகொண்டுனைய
லங்க ரிக்குமொரு தோழன்முன்புசிறு
செங்க லைக்கனக மாகவுங்கருணை—புரிவோனே

திண்டி றற்செழிய சேரன்முன்புநம
தன்பி னிற்பெரிய பாணனுண்கவலை
சிந்தி டப்பொருளை வீசுகென்றகவி—தருவோனே

மஞ்சு மொய்த்தரிய சூன்முதிர்ந்துபொழி
வின்றி டித்துமழை மாரிசிந்தமலி
மண்ட லத்திலுயர் நீர்வளம்பெருகு—புலியூர்வாழ்

வன்பு லிக்கரச ராவொடும்பணிய
கண்பு மிக்கசிவ காமியன்புகொள
மன்று ளூற்றுநட மாடுமெங்கள்சிவ—பெருமானே (சடு)

குழிப்பு.

தனதன தனத்தத் தந்தன
தனதன தனத்தத் தந்தன
தனதன தனத்தத் தந்தன—தனதான

நவமணி யிழைத்திட் டங்கதி
ரொளிவிடு மெழிற்பொற் பந்தென
நகுமுலை களிற்சிக் குண்டுழல்—வெறியேனாய்

நயமுட னவர்க்குத் தொண்டுசெய்
தலமரு துயர்ப்பட் டுஞ்சிறு
நலமனு பவித்தற் கென்றுள—நலிவேனை

சிவசிவ வெனக்கிச் சஞ்சல
மினியொழிய வைத்திட் டன்பொடு
திருவரு ளளித்துப் பண்புட—னகலாதே

செயலொடு மனத்துட் குஞ்சித
பதமலர் நினைத்துக்கொண்டனு
தினமறி துயிற்பெற் றிடகுற்—வருளாயே

அவனியி லகப்பற் றும்பல
விதமுறு புறப்பற் றுங்கெட
வமைவுறு தவத்திற்சென் றுள—மலையாதே

அசைவற விருக்கக் கண்டவர்
வினைகெட வழைத்துச் சந்தத
மளவறு சுகத்திற் றங்கிட—வருண்மேலோய்

உவமையி றவத்தைப் பண்டுசெய்
மலையரச னற்புக் குந்தனை
யுதவிய கயற்கட் பைங்கொடி—மணவாளா

உரிமையி னருச்சித் தன்பர்க
ளழகிய திருச்சிற் றம்பல
முடையவ னெனச்சுற் றுஞ்சிவ—பெருமானே (சகூ)

குழிப்பு.

தன தனந்தனத் தானத் தனதன
தன தனந்தனத் தானத்தனதன
தன தனந்தனத் தானத்தனதன—தனதான

தாள பந்தியிப் பாவைக் கிளநகை
முறுவலென்றுவப் பேன்மற் றதுகழி
தருப லென்பெனக் காணப் படுதலை—யறியாதே

தனத டங்களைப் பார்பொற்குடமென
வொளிரு மென்றுவப் பேன்மிக் கெழுதரு
தசைதி ரண்டுடற் றேலிற் பொலிவுறு—மென்னாடேன்

விரைவி லிங்கிதற் கேகித் தமுமலே
வெறிய னென்கிலெப் போதுத் தமனெந்தி
விழைவ துன்றிருப் பாதக் கமலமென் —முடிமீதே

மிலேவ தென்றெனப் பாவித் தமியனே
யுளமு வந்துசற் றேயற் புதவருள்
விளேவு றுங்கடைப் பார்வைக் கினிதருள் —புரிவாயே

நிரைத ளர்ந்திடக் கோவர்த் தனகிரி
தனேமு னம்பிடித் தேகைக் குடையென
நிறுவு திண்டிறற் காவற் கடவுள்பி —ரமன்வானோர்

நிலேகு லேந்திடப் பாரக் கொடுமைசெய்
தடர்பெ ரும்பகைச் சூரப்படைகளே
நிமிடம் வென்றிடச் சேயைத் தரவுள —மகிழ்வோனே

சரண மென்றுனேச் சேவித் தொருகல
மலர்பு னேந்தவர்க் கேமுத்தொழில்புரி
தலேமை யும்பெறத் தாபித் தருள்செயு —மிறையோனே

தருசி தம்பரத் தானத் திடையமு
கியபொ னம்பலத் தேகிர்த் தனமிடு
தருண குஞ்சிதத் தாள்வித் தகசிவ —பெருமானே (௬௭)

குழிப்பு.

தந்தன தான தான தந்தன
தந்தன தான தான தந்தன
தந்தன தான தான தந்தன —தனதானு

மந்தரமேரு வானகொங்கைகள்
சொந்தமதாக வேபுணர்ந்திட
வந்தனமோதி யேநிரந்தர —மகலாதே

மங்கையர்மோக மீறிநின்றொரு
தந்திரமாக வேநுழைந்திடு
வஞ்சகநேய ராகியன்புடை—யவர்போலே

எந்தமைநாளு மாறுகொண்டிடு
மிண்டனாயூடி வேறொடுங்கெட
வின்றருளாது நீயிருந்திட்—டெறியேயோ

எண்டிசையாரு மாவல்கொண்டிட
வும்பருளாரு மேபுகழ்ந்திட
விங்கெனையாள வேயெழுந்தருள்—புரிவாயே

செந்திருவாளு நாரசிங்கமெ
னுங்கொடுவேக ரூபமஞ்சுறு
திண்சரபாவ தாரனென்பவர்—பவநாசா

செங்கதிரோடு லாவுதிங்களு
மங்கியுமாக மேவுமங்கண
தென்புலநாதன்வீறடங்கவு—நினைவோனே

வந்தனையாதி யாவுமின்றியு
நிந்தனைபேசு வோன்மகந்தனில்
வந்தவர்யாரு மானபங்கம—துறநேர்வோய்

வம்புலவாத சீதபங்கய
குஞ்சிதபாத நாடகந்திகழ்
மங்களமான மாழைமன்றமர்—பெருமானே (௪அ)

குழிப்பு.

தனந் தனந்தன தந்தன தந்தன
தனந் தனந்தன தந்தன தந்தன
தனந் தனந்தன தந்தன தந்தன—தனதான

மறங்கிளர்ந்தகெ டுங்கண்மடந்தைய
ருளங்கனிந்துக லந்தவர்மென்றுற
வழங்குதம்பல முண்டுமகிழ்ந்தடர்—நகைபாலே

மயங்கிநின்றிக ழும்படிதொண்டுசெய்
திடும்பையும்பெரு வம்புமொழிந்துறு
வனந்திரிந்தலை கின்றவிலங்கினை—யனையேனும்

அறம்புரிந்துன தன்பர்பதந்தொழு
திறைஞ்சுகின்றில னின்புகழுஞ்சிறி
தறைந்திலன்படு துன்பமறிந்தனை—யிலையேயோ

அலர்ந்தகுஞ்சித பங்கயமென்றலை
புனைந்துவஞ்சனை யின்றியிரங்கியெ
னகங்குளிர்ந்திட வென்றினிவந்தருள்—புரிவாயோ

துறந்துசென்றுபு லன்களொரைந்தையு
மடர்ந்துவென்றுத வங்கள்புரிந்துறு
சுகம்பெறும்படி யென்றுநினைந்துனை—யகலாதே

தொடர்ந்தவன்பரி ருந்தவகந்தொறு
மடந்தைபங்கொடு முந்தியெழுந்தருள்
சுரந்திடும்பவ பஞ்சனசங்கர—சுகரூபா

கறங்குதெண்டிரை பொங்கியகங்கையு
மலர்ந்தகொன்றையு மம்புலியும்பணி
களுங்கலந்தணி செஞ்சடையுந்திய—மிகுசீரே

கனிந்தவின்சொல்பு கன்றுபதஞ்சலி
கதங்கொள்வெம்புலி யும்புகழ்மிஞ்சிய
கவின்றிகழ்ந்தொளிர் மன்றுணடம்புரி—பெருமானே (௪௬)

குழிப்பு.

